**O.S No.38/2023**

**DW1 : திருமதி முத்துச்செல்வி , W/o.திரு.அருணாச்சலசேகர்**

**dt: 20.08.2024**

20.08.2024 அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, வாதிதரப்பில் பி.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 யார் யாருக்கு ஏற்படுத்தி கொடுத்தது என்றால் சுடலையாபிள்ளை வாரிசுகள் எனது கணவரான 2 வது பிரதிவாதி அருணாச்சலசேகருக்கு எழுதி கொடுத்தது. எந்த புலஎண்ணை பொறுத்து மேற்படி ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தது என்றால் புலஎண் 1382/16. பி.சா.ஆ.1ல் கதவு 5/37 மற்றும் 5/39 கொண்ட வீடுகளை கிரையம் பெற்றதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், மண் வீடு இருந்தது, இடிந்து விட்டது.

2. நான் கிரையம் பெற்றதற்கு பிறகு மேற்படி மண் வீடு இடிந்து விட்டதா என்றால் இல்லை, முன்பே இடிந்து விட்டது. ஆனால் பி.சா.ஆ.1ல் வீடு இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றாலும், வீடு இடிந்து விட்டதாக காட்டப்படவில்லை என்றாலும் புலவரைபடத்தின் படி எங்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள். அப்படியானால் ஸ்தலத்தில் இல்லாத வீட்டை பொறுத்து நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றாலும் நாங்கள் காலிமனையும், 10x10 அறையுள்ள வீட்டையும்தான் கிரையம் பெற்றோம்.

3. பி.சா.ஆ.1 கிரைய ஆவணத்திற்கு முன்பு எத்தனை வருடங்களாக அதில் வீடு கிடையாது என்றால் 4-5 வருடங்களுக்கு முன்பே வீடு கிடையாது. பி.சா.ஆ.1 ஆவணத்தில் 10.02.2021 தேதியிட்ட இரண்டு வீட்டிற்கான இரண்டு தீர்வை ரசீதுகளை காட்டி மேற்படி கிரையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் ஒரு வீடு இருந்தது ஒரு வீடு இல்லை. பி.சா.ஆ.1 இல்லாத சொத்துக்களை மோசடியாக காட்டி, மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

4. பி.சா.ஆ.1 ஆவணத்தில், என்னுடைய முன்கிரையதாரர்களின் மூலம் ஆவணம் குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால் மூல ஆவணம் பற்றி தெரியாது, புலவரைபடம் மற்றும் என்னுடைய முன்கிரையதாரர்களின் பெயரிலுள்ள பட்டா ஆகியவற்றின் அடிப்படையில் கிரையம் பெற்றேன். பி.சா.ஆ.1 ஆவணத்தில் புலஎண் 1382/16 வடபுறம் சந்து உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், ரிக்கார்ட்டில் உள்ளது போல் அப்படியே காட்டப்பட்டுள்ளது.

5. மேற்படி சந்து தான் புலஎண்.1382/15 என்றால் சரிதான், ஆனால் பூமியில் சந்து இல்லை. மேற்படி சந்தை பொறுத்து தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி இவ்வழக்கை தாக்கல் செய்த போது, பி.சா.ஆ.1 கிரைய ஆவணம் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் பிரதிவாதிகள் ஆஜராகி வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான் பி.சா.ஆ.1 கிரையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. புலஎண்.1382/15 சந்திற்கு தெற்கே உள்ள 1382/16 சொத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்டுளள பி.சா.ஆ.1 கிரைய ஆவணத்திற்கு பிறகு தான் மேற்படி சொத்தில் உரிமை ஏற்படும் என்றால் அதற்கு முன்பு ரூ.20/– பத்திரத்தில் எழுதி வாங்கிவிட்டோம். மேற்படி ரூ.20/– பத்திரத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. பி.சா.ஆ.1ல் அதற்கு முன்பு ரூ.20/– பத்திரத்தில் எழுதி வாங்கிவிட்டதாக காட்டப்படவில்லை என்றாலும், மேற்படி தேதியிலேயே கிரைய தொகைப் பெற்று கிரையம் வாங்கப்பட்டதாகவும் அனுபவம் ஒப்படைக்கப்பட்டதாகவும் காட்டப்பட்டுள்ளது என்றாலும், அது பற்றி எனக்கு தெரியாது. புலஎண் 1382/14ல் உள்ள வாதியின் வீடு கட்டி 15 வருடங்கள் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, நான் திருமணமாகி வருவதற்கு முன்பிருந்தே உள்ளது.

8. பி.சா.ஆ.1 ஆவணத்தில் முன்கிரையதாரர்களின் அனுபவத்தின் போதே, 1382/14ல் உள்ள வாதியின் வீடு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையில் வாதி பொதுபாதையை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளதாக கூறியுள்ளது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும் எனது கணவர் கிரையம் வாங்கும் போது அளந்து பார்த்தோம், அப்போது ஆக்கிரமிப்பு பற்றி தெரிந்தது. எனது கணவர் கிரையம் வாங்கும் போது அளந்து பார்த்ததாகவும், அப்போது ஆக்கிரமிப்பு பற்றி தெரியவந்ததாகவும், நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

9. புலஎண்.1382/16 ஐ வாதி ஆக்கிரமிப்பு செய்ய முயன்றதாகவும், அதனை பிரதிவாதிகள் தடுத்ததாகவும், அதனால் வாதி வன்மம் கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கு தாக்கல் செய்த காலத்தில் புலஎண் 1382/16 ல் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லாததால், எதிர்வழக்குரையில் கூறியுள்ள

சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

10. புலஎண்.1382/16 ன் முன்உரிமையாளர்கள் புலஎண் 1382/15 மற்றும் புலஎண் 1382/16 ஆகியவற்றை வாதி ஆக்கிரமித்துள்ளதாக எவ்வித புகார் மனுவோ அல்லது வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் முன்உரிமையாளர்களுக்கு வாதியின் ஆக்கிரமிப்பு குறித்து தெரியாது, எனது கணவர் கிரையம்பெறும் போதே அளவை செய்த போதே தெரிய வந்தது. புலஎண் 1382/15 மற்றும் புலஎண் 1382/16 ஆகியவற்றில் வாதி எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யாததால் தான், முன்உரிமையாளர்கள் எவ்வித புகார் மனுவோ அல்லது வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11. பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு சொத்தை நிலஅளவையர் உதவியுடன் அளவீடு செய்ய ஆணையர் நியமிக்க மனு தாக்கல் செய்து, மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை என்றால் சரிதான். **இ.ம.எண்.716/2023 ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கை நீ.சா.ஆ.1 ஆகவும், ஆணையர் வரைபடம் நீ.சா.ஆ.2 ஆகவும், நிலஅளவையர் வரைபடம் (எண்ணம்3) நீ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

12. நீ.சா.ஆ. 2 ஆணையர் வரைபடத்தில் 1 வது தபசில் சொத்திற்கு தெற்கே கிழமேல் சந்து உள்ளதாக ஆணையர் காட்டியுள்ளார் என்றால் காட்டியுள்ளார், ஆனால் அது தவறு. நீ.சா.ஆ.1 அறிக்கையில் இரண்டாவது பத்தியில் 1 வது தபசில் அதன் வாரண்டில் காட்டப்பட்ட எல்கைமால்களுக்கு பொருந்தி வந்தாகவும், அதனை தனது வரைபடத்தில் நீ.சா.ஆ.2 ல் ABCD என காட்டியுள்ளதாகவும், பாரா 3 ல் வாரண்டில் கண்ட 2 வது தபசில் எல்கைமால்களுக்கு பொருந்தி வந்தாகவும், அதனை தனது வரைபடத்தில் நீ.சா.ஆ.2 ல் EFGH என காட்டியுள்ளதாகவும், கூறியுள்ளார் என்றால் தவறாக கூறியுள்ளார்.

13. மேற்படி அறிக்கை தவறாக உள்ளதால் மீண்டும் ஆணையர் நியமிக்க கோரி நான் எவ்வித மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது குறுக்கு விசாரணைக்கு பிறகு வழக்கறிஞர் முடிவு செய்வார். புலஎண் 1382/16 க்கு தெற்கு பக்கம் மண்சாலை பாதை உள்ளது என்றாலும் மேற்படி பாதை புலஎண் 1382/18

என்றாலும் மண்சாலை பாதை உள்ளது, ஆனால் புலஎண் தெரியாது.

14. மேற்படி மண்சாலை பாதை ஸ்தலத்தில் 6 மீட்டர் உள்ளதாகவும் வரைபடத்தில் 2.4 கூடுதலாக உள்ளதால் வரைபடத்தின் படி தெற்கிலிருந்து வடக்கு வரை ஒவ்வொரு புலஎண்ணிலும் உள்வாங்கியுள்ளதாக ஆணையர் அறிக்கையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். தெற்கிலிருந்து வடக்கு வரை தபால்நிலையம் உட்பட பல பழைய கட்டிடங்கள் உள்ளன என்றால் சரிதான்.

15. பி.சா.ஆ.1 ஆவணத்திற்கு பிறகு பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் கூறியுள்ளப்படி வாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக எவ்வித வழக்கும் தாக்கல் செய்ய வில்லை என்றால் அதற்கு முன்பாக வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டார். நான் வாதிக்கு எதிராக எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் வாதி தாக்கல் செய்ததால், நாங்கள் வழக்கை தாக்கல் செய்யவில்லை.

16. வழக்கு 2 வது தபசில் சொத்தில் 08.12.2020 ல் நாங்கள் முள்வேலி அடைப்பை ஏற்படுத்தி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் செயலால் வழக்கு 2 வது தபசில் பொதுபாதை வழியாக 1 வது தபசில் வீட்டினை வாதியால் சுமூகமாக அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வாதிக்கு அவரது வீட்டிற்கு செல்ல பின்வாசல் உள்ளது.

17. புலஎண்.1382/14 நிலத்தை கிரையம் பெற்று அதில் வீடு கட்டியதுடன் 1382/15 பொதுபாதையாக 2 வது தபசில் முழுவதையும் வாதி ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1382/16 வாதி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

18. பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்பதால் தான், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்காமல் நான் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ள தக்கதல்ல என்றால் சரியல்ல.